**R 4203**

# தன்னால் இயன்றதை அவள் செய்தாள்

## "SHE HATH DONE WHAT SHE COULD"

சீமோன் வீட்டினில் விருந்து பறிமாறப்பட்டது,
விருந்தினர் அனைவரும் அமர்ந்தபின்னே,
அமைதியாகவே கதவினைத்திறந்தே
துடிக்கும் இதயத்துடன்தானே,
மாது ஒருத்தி வந்தாள் முன்னே, நளதம் என்னும் கலப்பற்ற
விலைமிகு நறுமணத்தைலம் ஒரு இராத்தல் கொணர்ந்தாள்,
தன்னைக்கூர்ந்து பார்வையால் துளைத்திட்ட
அத்தனை விழிகளின் முன்பாய், தான் மிகவும் நேசித்த
நண்பரை அங்கே கண்டுகொண்டாள்.
அவள் எஜமானும் கர்த்தரும் அவர்தாமே,
ஆச்சரியமான உள்ளுணர்வாலே உந்தப்பட்டே,
தக்க தருணம் இதுதானே, இதை விட்டால்
வேறே தருணம் கிடைக்காதென்றே
அவர் தனக்குச் செய்தனவற்றை எண்ணிப்பார்த்தே,
தம் அன்பை வெளிப்படுத்த, மற்றவர் யாவரையும் மறந்தாள்,
தான் கேட்ட சத்தியம், ஜீவனுள்ள வார்த்தைகளை
மீண்டும் எண்ணியே, லாசரு மரித்த அந்த நாள்தனை
நினைந்து, மீண்டும் அவரை உயிர்பெறச்செய்தது
யாவையும் நன்றியால் நினைத்தே,
ஆனந்தக் கண்ணீர் வடித்தே,
நன்றிப்பெருக்கால் முகம் சிவந்து, கண்களில் வடிய,
கூட்டத்தால் நிரம்பிய அறையினில் நடந்தே,
இயேசுவின் காலடிப்பக்கம் அமர்ந்து,
கேள்விக்கணைகளால் துளைத்திட்ட
பார்வைகளை வீரத்துடனே எதிர்கொண்டு,
அன்பின் பாதையில் பயணிக்க,
சிங்கங்கள்கூட எதிர்கொள்ளத் தயங்கும்,
நடுங்கும் கரங்களால் பேழையின் மூடியைத் திறந்தே,
இரட்சகர் பாதத்தில் தைலத்தை ஊற்றினாள்,
வீடு முழுவதும் நறுமணம் நிரம்பியதே,
அமர்ந்தவர் அனைவரும் இனிமையாய் நுகர்ந்தனரே,
அவள் இதயம் ஆழ்ந்த மகிழ்ச்சியில் திளைக்க,
தானே ஏதும் பேசாமலே,
கண்ணீர் மாத்திரம் கன்னத்தில் வழிய,
கர்த்தரின் கால்களைக் கண்ணீர் கழுவ,
தன் நீண்ட பட்டுக் கருங்கூந்தலை எடுத்தே
அவர் புனித பாதத்தைத் துடைத்தெடுத்தாளே.
திடீரெனவே ஓர் கடுங்குரல் ஒன்று ஏக சத்தமாய்
ஓங்கி ஒலித்ததே. போச்சு போச்சு,
எல்லாம் வீணாய் போச்சு. முன்னூறு பணத்திற்கு மேலாய்
விற்று, முற்றும் ஏழைக்கே செலவழித்திருக்கலாம்.
இப்போ எல்லாம் தரையில் கொட்டப்பட்டே
வீணாய்ப் போச்சே, என்றே கூவினார்
யூதாஸ் என்ற சீடன்தாமே.
இவ்வார்த்தை தன்னைக் கேட்டும்கூட, இம்மாபெரும்
அன்பளிப்பை வழங்கிடும் வேளையில்,
மீண்டும் ஓர் குரலொலி அறையினில் ஒலித்ததே,
அவள் கர்த்தரின் அன்பின் குரலொலி அன்றோ,
"அவளை யாரும் தடைசெய்யவேண்டாம், எனக்கவள்
அவளால் இயன்ற நற்காரியம் தனைச் செய்தாள்,
என் அடக்கச் சடங்கிற்கானதை
இப்பொழுதே செய்துவிட்டாள்,
அவளின் இந்தச் செயலோ,யுகங்கள் கடந்தும் பேசப்படுமே!
இந்தப் புனித செயல்தனையே வாசிக்கும்போதினிலே,
எனது இதயமோ பற்றிக்கொண்டதே, எழுச்சி கொண்டதே,
ஏங்கும் ஆசையில், இத்தகைய ஓர்செயல்தனையே
என்னுடைய கர்த்தருக்கும், ராஜாதிராஜாவுக்கும்,
பதினாயிரம் பேரினில் சிறந்தவர்க்கும்,
அன்பே உருவானவர்க்கும் செய்திடவே மனம் ஏங்கிடுதே,
ஆனால் இப்பொழுதும் அது தாமதமாகவில்லையே,
நான் இப்போதும்கூட அன்பின் விலைமதிப்பில்லா
தைலக்குப்பி தன்னைத்திறந்து
உம் பாத அங்கங்கள் மீதினில் ஊற்றி,
கர்த்தரே உமை வேண்டுகின்றேன்,
பரிசுத்தமான கரங்கள்கொண்டே,
தன்னலம் என்ற முத்திரை உடைத்தே,
என் இருதயம்தன்னில் உள்ள வாசமிகு தைலம் தன்னை
உம் பாதம் மீதினில் ஊற்றிட வேண்டுமே,

என் இரவு, பகல் அனைத்தையுமே
அம்முயற்சியிலேயே கழிக்க வேண்டுமே,
தேவையற்ற அலைச்சலையும் கவலையையும்களைந்திடுமே,
இடுக்கமான பாதைதனில் நடத்திச்செல்லுமே,
அவர் கரங்களில் ஓர் ரோஜாப்பூவினைப்போல்
அடங்கியிருக்க எனக்கு அருள்தாருமே,
லீலிபுஷ்பங்களைப்போன்றே தூய்மையாகவும்,
அவர் நெஞ்சத்திலே நான் இடம்பிடித்திடவும்,
அவர்களோடே சேர்ந்தே கெத்சமெனேயில்
முழங்கால்படியுடவும்,
கொடுமையின் பற்கடிப்பை விழுங்கிடவும், தாங்கிடவும்,
தாழ்மையிலே தைர்யமாய் நின்றிடவும் ,
ஏளனப்பேச்சினைத் தாங்கிடவும்,
வாழ்க்கைக்கு ஆகும் செலவினைக் கணக்கிடாமல்,
பணிவிடைசெய்யவும், ஆசீர்வதிக்கவும்,
உம் பாத அங்கங்களை உற்சாகப்படுத்தவுமே,
எனது இருதயத்தின் கடைசிசொட்டு சிந்துமட்டும்,
‘‘அவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்’’ என்று
இனியகுரலில் நீர் சொல்வதைக்
கேட்கவும் செய்யும் தேவனே.

––––––––––––––––––